PDF Eraser Free

# 1

# மண்ணிலே வெண்ணிலா

நிலவின் சிறப்புத் தன்மையால் நாம் அதைப் பெண்ணுக்கு ஒப்பிடுகிறோம். வேதமும் இதற்குப் பல குறிப்புகளைத் தருகிறது.

இரவை ஆளவே இறைவன் நிலவைப் படைத்தார் (ஆதி 1:16). இருள் சூழ்ந்த இவ்வுலகில், குறிப்பாக இல்லத்தில், பெண்களின் பொறுப்பு அதுவே. ஈசாக்கின் வாழ்விலுள்ள இருள் ரெபெக்காளின் வருகையினால் அகன்றது. “ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்” (ஆதி 24:67). இரவை ஆளவே உண்டாக்கப்பட்ட நாம், அதை மறந்து, இரவைக் குறித்துக் குறைகூறித் திரியலாமா? இல்லமென்றால் இருள் இருக்கத்தான் செய்யும். அதை ஒளிமயமாக்கும் கிருபையும் பொறுப்பும் நமக்கே உண்டு என்பதை மட்டும் நாம் புரிந்துகொண்டால் நிலவொளியின் நடு இரவும் எத்துணை இன்பமும் பிரியமுமாயிருக்கும் தெரியுமா? ஆனால் நாமோ இரவைக் குறை கூறுகிறோம். நம்மை நாமே மேகத்தால் மூடிக்கொண்டு, சுற்றியுள்ள உலகை இருளில் விட்டுவிடுகிறோம்.



பகலின் பகட்டு வாழ்வில் தங்கியிருப்பதையே நாம் கனவு காண்கிறோம். பகலில் நிலவினால் பயன் என்ன? ஒளியும் தெரியாது, அழகும் இருக்காதே. இருளை ஒளியாக்கும் நமது மாபெரும் கடமையை விட்டு ஆண்களின் பகலொளிக்குப் போட்டியிடுவது பொருந்துமா? இன்றையச் சோக நிலை இதுவே. நவீன உடைகளும், சமூக நாட்டமும் எத்தனை குடும்பங்களை நாசமாக்கிவிட்டது தெரியுமா? கணவர் கவனிக்கப்படுவதில்லை; குழந்தைகள்மேல் கரிசனை காட்டப்படுவதில்லை; விவாகரத்தும், கேவல நடத்தையும், உடல்நலக்கேடும், மனநோயும் மலிந்துவிட்டன. உலகை அழிவுக்குத் தப்புவிக்கும் தன்மை பெண்ணுக்கே உண்டு. பெண்ணானவள் ஒளிவீசி வாழ வேண்டுமானால், தேவன் குறித்துள்ள இடத்திற்கு வர அவள் பக்குவப்பட்டே ஆகவேண்டும். தேவன் நமக்களித்த இடத்திலும் மேலான நிலைமையை நாடித் தேடி தேவ கட்டளையை மீறுவதால்தான் தேவ மக்களுக்குத் தோல்வி ஏற்படுகிறது. எதிரி வீழ்ச்சியடையும்வரை, தேவனின் சொல் கேட்டு, ஆயலோன் பள்ளத்தாக்கில் நின்றதே அந்நிலவு! (யோசு 10:12,13). தேவன் உனக்குப் பள்ளத்தாக்கைத்தான் குறித்திருந்தால் எதிரியை வீழ்த்திட நீ அங்கேயே இரு. பள்ளத்தாக்கில் உனது சேவை ஒருவேளை பாராட்டில்லாமல் போகலாம். ஆனால் பரிசோடு தேவன் வருவாரே! போதாதா அது உனக்கு? சகோதரியே, எழும்பு! உன்னை மறைக்கும் மேகத்தை விட்டு வேகமாய் வெளிக்கிளம்பி வா! “இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்” என்று திருப்பாடகனோடு சேர்ந்து பாடு (சங் 139:11).

ஒளி வீச வேண்டுமானால் முதலாவது உன்னில் ஒளியில்லை என்பதை நீ உணரவேண்டும் (யோபு 25:5). சந்திரன் தன் ஒளியைச் சூரியனிடமிருந்தே பெற்றுக்கொள்வது போல நீயும் நீதியின் சூரியனாம் கிறிஸ்துவுக்கு முன் காத்திருந்து அவர் தரும் இலவச ஒளியைப் பெற்றுக்கொள்ளப் பழகிக்கொள். உன்னைச் சுற்றியும் இருளில் வாழும் எண்ணிலா மக்களுக்கு அவர் ஒளியைப் பிரதிபலிக்கும் வெண்ணிலவாய் இரு. “அவர்கள் கடவுளை நோக்கிப் பார்த்துப்

PDF Eraser Free

பிரகாசமடைந்தார்கள்'' (சங் 34:5). ''கர்த்தர் தமது முகத்தை உன்மேல் பிரகாசிக்கச் செய்வார்'' (எண் 6:25). உன்னைப் பிரகாசிப்பிக்கும் ''மெய்யான ஒளி'' இயேசுவே (யோ 1:9).

துன்ப நேரத்தில் துவண்டுவிடுவதும், கண்ணீர் சிந்துவதும் பெண்ணின் பிறவிக் குணம். எனவே அவள் தேற்றப்படவும், ஆற்றப் படவும் விரும்புவது இயல்பே. ஆனால் துன்ப வேளையில் பிறர் அன்பை, ஆறுதலை மட்டுமே உன் இதயம் தேடுகிறதோ? வேண்டாம். அவ்வெண்ணத்திலிருந்து இன்றே விடுபடு. அதிகாலை தோறும் திருமுகவொளியில் ஆனந்தமாய்க் களித்திடு (சங் 89:15). ''தேவனே, நான் புரிந்துகொள்ளப்படுவதைவிட புரிந்துகொள்ளவே விரும்புகிறேன்'' என்று புனித பிரான்சிஸ் வேண்டினார். அதுவே நமது ஜெபமாயிருக்கட்டும். குழந்தையில்லாதிருந்த ராகேல் தன் இதய வேதனையைக் கணவனிடம் கொட்டி, ''எனக்குப் பிள்ளை கொடும், இல்லையேல் நான் சாகிறேன்'' என்றாள். அவள் வேதத் தின் அப்பக்கங்களையே இருட்டாக்கிவிட்டாள். ஜோதிகளின் பிதாவை அவள் உள்ளம் நாடியிருக்குமேயானால் அவளது சாட்சி எவ்வளவாய்ப் பளிச்சிட்டிருக்கும், எண்ணிப் பாருங்கள்! அதே பிரச்னையுடைய அன்னாளின் நடத்தையைப் பாருங்கள். அவள் கடவுளின் முன்னிலையில் தன் கண்ணீரைக் கொட்டினாள். ''பின்பு அந்தப் பெண் புறப்பட்டுப்போய் சாப்பிட்டாள்; அப்புறம் அவள் துக்க முகமாயிருக்கவில்லை'' என்று வேதம் கூறுகிறது (1 சாமு 1:18). சிறு மனத்தாங்கலுக்கும் சாப்பிடமாட்டேனென்று கண்ணீர் சிந்தி நீண்ட முகத்துடன் திரியும் பெண்களுக்கு என்னே முன்மாதிரி!

சந்திரனுள்ளவரை மிகுந்த சமாதானம் இருக்குமென்று விவிலி யம் பகருவது வியப்பில்லையா? (சங் 72:7). ஆனால் நமது நிலை அதற்கு நேர்மாறாயிருக்கிறதே! ''நூறு ஆண்கள் கூடி வாழ்ந்து விடலாம்; ஆனால் இரண்டே பெண்கள் சேர்ந்து இருக்க முடியாது'' என்ற முதுமொழி எத்தனை வேதனைக்குரியது. நீ இருக்கிற இடத்தில் மிகுந்த சமாதானம் உண்டு என்று உன்னைக் குறித்துச் சொல்ல முடியுமா? அல்லது நீ தொலைந்தால்தான் அமைதியென்று உன் குடும்பம் சொல்லுகிறதா? அந்தோ! அநேக பெண்கள் இங்கு



தவறுவதால்தான் ஆண்களுக்கு வீட்டு எண்ணமே வெறுப்பை யளித்து, எங்காவது சென்று நேரத்தைக் கழிக்கும் நினைப்பு வருகிறது. உன் கணவருக்கு வீடு கசப்பாகுமானால் உன்னைத் தான் நீ சோதித்துப் பார்க்கவேண்டும்.

என்றோ படைத்த அந்நிலா எத்தனைக் காரிருளிலும் தன் அமைதியை அத்தனையாய்க் காத்திடுதே! மரண இருளின் பள்ளத் தாக்கில் உருவ நடந்தாலும், மனம் குன்றாது வாழ்வது எப்படி என்பதை அறிய வேண்டுமா? நள்ளிரவில் எழுந்து முழு நிலவைக் கவனித்துப் பார்! கலக்கம் என்பது கடுகளவும் அதற்கில்லை; எரிக்கும் குணம் எள்ளளவும் இல்லை. பதறாத அதன் பயணத்தைத் தான் என்னென்று சொல்வது! துவண்ட உள்ளத்தைத் தேற்றும் குளுமை! என்னே இனிமை! நாமோ கணப்பொழுதின் வேதனை யில் நமது நிலைமையை மறந்து கடுஞ்சொல்லை விசி எறிகிறோம். இதனால் வீட்டின் அமைதியே பறிபோய்விடுகிறது. சற்று அந் நிலவைப் பார்! மின்னலின் கேலி, இடி முழக்கப் பெருந்தொனி, புயலின் சீற்றம் மற்றும் எதற்கும் கலங்காத அமைதி, அழகு! கணவன், குழந்தைகள், வேலைக்காரர், சுற்றத்தார் எவரும் உனக்கேயுரிய அமைதியை அபகரிக்க இடங்கொடாதே! வாழ்வின் எந்நிலையிலும் சமாதானம் பண்ணவேண்டிய உன் கடமையைக் கருத்தில் கொள்வாயா? அன்று அபிகாயில் தனது சோகமய வீட்டையே ஒளிமய மாக்கிக் கடவுளால் ஆசீர்வாதம் பெற்றாள். ''நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக; நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழி வாங்காதபடிக்கும், நீ இன்று எனக்குத் தடை பண்ணினபடியினால் நீயும் ஆசீர்வதிக்கப்படு வாயாக!'' என்று அரசன் தாவீது அவளை வாழ்த்தினான் (1 சாமு 25:33). ''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது'' என்றார் இயேசு (மத் 5:9).

வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் ஆசீர்வாதமாயிருக்கவே தேவன் நம்மை உண்டாக்கினார். ''தேசம் ... சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினால் ... ஆசீர்வதிக்கப்படுவதாக'' (உபா 33:13,14). ஆம், சந்திரனின் அருமையான பலன்களினால் நாடு

PDF Eraser Free

ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். இந்நாடு நம்மால் சற்றாகிலும் நலம் பெற்றுள்ளதா ? இந்தியா வாய்ப்பு மிக்க நாடாயிற்றே. 360 டிகிரி சுற்றுமுன் 360 மக்களைச் சந்திக்கலாமே. நமது நற்பலன்களை அள்ளி வழங்க என்னவோர் வாய்ப்பு! “உன் சந்திரன் மறைவ தில்லை” என்பது நாட்டின் ஆசீர்வாதங்களில் ஒன்றல்லவா ? (ஏசா 60:20). “நற்செயல்கள்” மிகுதியாய்ச் செய்து தொற்காள் தன்னைச் சூழ இருந்தோருக்கு பேராசீர்வாதமாயிருந்தாள் (அப் 9:36). “மனிதர் உங்கள் நற்செயல்களைக் கண்டு, பரலோகத்திலி ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கட்டும்” என்ற நமது கர்த்தரின் கட்டளையைக் கவனித்து நடப்போமா ? (மத் 5:16).

இரவை ஆளச் சந்திரனைப் படைத்தார் எனப் பகரும் வேதம் அந்தகாரலோகாதிபதிகளையும் குறிப்பிடத் தவறவில்லை. நமது அரசு வென்றிட அவைகளோடும் நாம் போராடியே தீரவேண்டும். இந்த அதிபதிகள் நமது இந்தியப் பெருங்குடி மக்களை இருளில் அடிமைப்படுத்தி, கோடிக் கோடி சகோதரிகளை ஆட்டிப்படைக்கும் அவல நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமோ ? இருளில் ஒளிவீசும் முழு நிலவாய், வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பி லும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரிகளாய்த் திகழ்ந் திடுவோம். நாம் இருப்பதே மக்களுக்கு தேவ நினைவை உண்டு பண்ணத்தான். அவரை அவர்கள் தேடுமளவிற்கு நமது ஒளி அவர்கள் முன் பிரகாசிக்க வேண்டும். நிலவுத் தோற்றத்தில் தாவீது தேவ மகிமையைக் கண்டார் (சங் 8:3). நம்மைச் சூழவுள்ள தேவனற்ற சந்ததி நம்மைக் கவனித்துக்கொண்டிருக்கிறதென்பதை மறவாதே ! வேதம் வாக்களிக்கும் ஆத்தும இரட்சிப்பு, உடல் சுகம், வாழ வல்லமை, பிரச்னைகளுக்குத் தீர்வு, கேள்விகளுக்கு விடை போன்ற அனைத்திற்கும் மக்கள் நமது வாழ்க்கையினையே புரட்டிப் பார்க்கிறார்கள். நாம்தானே நடமாடும் நிருபங்கள் ? வேதம் நம்மில் உயிருள்ளதாயிருக்கட்டும். நம்மைப் கவனிப்போருக்கு வேதத்தின் அருமையான பலன்களை அள்ளித் தருவோம் (உபா 33:14). நம் மைக் காணுவோர் கிறிஸ்துவையே காணும்படி, கிறிஸ்துவின்



வாழ்வைத் தீர வாசித்து, அறிந்து, தெளிந்துணர்ந்து அப்படியே பிரதிபலிப்போம். இஸ்ரவேலர் இருண்ட காலத்தைக் கடக்கையில் ஒரு முழு நிலவாய் எழும்பினாள் தெபொராள்! தன் ஒளிக் கதிரால் அவர்களைக் கவர்ந்தாள், தேவைகளைச் சந்தித்தாள். வந்தோர் அனைவரும் தேவ ஞானம் அவளிலிருக்கக் கண்டனர் (நியா 4:1-4). “சந்திரன் ஆகாய மண்டலத்தின் உண்மையான சாட்சியாய் என்றென்றைக்கும் இருக்கும்” (சங் 89:37). இம்மண்ணிலே நமது கடமையும் அதுவே!

“சந்திரனைக் காலக் குறிப்புகளுக்காகப் படைத்தார்” (சங் 104:19). மாபெரும் அழிவினின்று தம் மக்களைக் காக்க எஸ்தரை அரியணையில் அமர்த்திய தேவன், ஆபத்து வேளைக்கென்றே பெண்டிரையும் படைத்துள்ளார். “நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் ?” (எஸ்தர் 4:14). இக்காலத்தில் மவுனமா யிருந்தால் தேவன் நம்மைக் கட்டாயம் நியாயந்தீர்ப்பார். “நான் செத்தாலும் சாகிறேன்” எனப் பலிப்பீடத்தில் நம்மையே படைத்து கதறுவதேயன்றி வேறொன்றுமே நமது நாட்டை இன்று தப்புவிக் காது (4:16). எனவே இன்றே உபவாசத்தோடும் கண்ணீரோடும் கர்த்தர் பாதம் விழு (4:8,16). உன் மக்களுக்காய் அவரிடம் கதறி அழு (7:3). அவர் சமுகத்தில் மீண்டும் மீண்டும் பேசி, அவர் தாளடியைப் பற்றிப் பிடித்துக் குலுங்கி குலுங்கி அழு (8:3). நமது மக்கள்மேல் வரும் பொல்லாப்பை எப்படிப் பார்ப்பது ? நமது இந்திய சகோதரிகளுக்கு வரும் அழிவை நாம் எப்படிச் சகிப்பது ? (8:6).

சந்திரன் இருண்டுவிடுமுன் உன் சிருஷ்டிகரை நினை என்று வேதம் அறிவுரை பகர்கிறது. நீயே இருண்டுவிட்டால் உன் சிருஷ்டிகரைப் பிறர் நினைப்பது எப்படி ? (பிர 12:1,2). கொடிய காலங்கள் வரும். அந்நாட்களில் நாம் மவுனமாயிருக்க நேரிடும். நமது சுயேட்சையை இழந்து நமது ஒளியைக் கொடாமலிருக்க வேண்டிய நிலை நேரிடும். இயேசு கிறிஸ்து முன்னறிவித்த நாள் இதுவே. “அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே ... சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும் ... வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்

PDF Eraser Free

படும்'' (மத் 24:29). எனவே உயிருள்ளபோதே, ஒளியுள்ளபோதே, சுகமுள்ளபோதே, சுயேட்சையுள்ளபோதே போ... செயல்படு... ஒளிகொடு. ''நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்'' (மத் 5:14). மெய் ஒளியான இயேசு இந்த நம்பிக்கையிலேயே உன்னை விட்டுப் பரமெழுந்தார். உன் விளக்கை மேகத்தால் மூடிப் போடாதே (மத் 5:15). கிறிஸ்துவோடு எழுந்து நீ நிலவைப் போன்று உன்னதங்களில் அவரோடு வீற்றிருக்கிறாய்! உலகம் உன் ஒளியைக் காணட்டும். ''எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது; கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது'' (ஏசா 60:1). ''பூமியின் கடையெல்லை வரை அவருடைய இரட்சிப்பாயிருக்கும்படி, புறவினத்தாருக்கு அவர் உன்னை ஒளியாக வைப்பார்'' (தானி 12:3).

''சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம்போல் உதிக்கிற இவள்'' என்று தேவன் உன்னைச் சித்தரிக்கிறார் (உன் 6:10). உன் காதலன் உன்னை நேரில் காணுமுன் இப்படி நினைக்கிறான் என வைத்துக்கொள்ளுவோம். அவன் வரும்போது ஏனோதானோவென்றிருப்பாயா? உன்னாலான மட்டும் அலங்கரித்து, அவன் விரும்பும் வகையில் அவனுக்கு எதிர்ப்பட விழைவாயல்லவா? ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில், அவர் ஏமாற்றமடையாதபடி, நம்மை அவர் தரத்திற்கு உயர்த்திக் கொள்ள, ஆத்தும நேசர் தீட்டிய நமது சித்திரத்தை நம்முன் வைத்து அனுதினமும் ஏங்கி வாழ்வோமா? அருங்குணத்தில் அருணோதமாய், பரிசுத்த அழகில் சந்திரனாய், நமது வீட்டை, வேலையை, சுற்றத்தைச் சிதறடிக்க சத்துரு வெள்ளம்போல் வரும்போது கர்த்தருடைய ஆவியானவரின் கொடிகளைப் பிடித்து படையைப் போல் கெடியுமுள்ளவர்களாய் அணிவகுத்து நிற்போமா?